# தொல்காப்பியத்தில் மெய்யியல் சிந்தனைகள்

முனைவர் கா. திருநாவுக்கரசு
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி,
பேரூர் – 10. k.thiruna@gmail.com

16

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகப் பழமை வாய்ந்த ஒரு மொழியின் இலக்கண வரையறைகளைத் தொகுக்கும் போது, அம்மொழியினைச் சார்ந்த மக்களது பண்பாடுகளும் நம்பிக்கைகளும் பதிவாகின்றன. தமிழ்மொழியின் இலக்கணக் கூறுகளிலும் அத்தகைய பண்பாடு மற்றும் நம்பிக்கை சார்ந்த கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளன. தமிழர்தம் பண்பாட்டுள் மெய்யியல் என்பதும் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டமைகிறது. இவ்வாறாகத் தமிழின் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பிய நூற்பாக்களில் உள்ள மெய்யியல் சிந்தனைகள் இக்கட்டுரையில் கண்டுரைக்கப்பட்டுள்ளன. உலகப்பொருட்கள் அனைத்திற்கும், தோற்றம் சார்ந்துவரல், இறுவாய் முதலியன அமையும் முறையும், உயிர் உடலை இடமாகக் கொண்டு செயல்படுவது என்பதும், காலம், தெய்வம், வினை, ஊழ் முதலிய சிந்தனைகள் தமிழரிடத்து இருந்தனவென்பதும், ஆகமம் என்னும் தமிழ்ச்சொல் கட்டுண்ட உயிர்க்குலங்களை நிறைவித்து உய்விக்கச் செய்வதெனும் பொருளில் வழங்குகிறது என்பதும் இக்கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளன.

**முன்னுரை**

சங்ககாலம் என்று வரையறுக்கப் பெறும் காலத்திற்கு முன்பு விளங்கிய நூல் தொல்காப்பியம். இது தமிழரின் வாழ்வியல், மெய்யியல் தன்மைகளைத் தன்னகத்தே உள்ளடக்கிய நூல். சங்ககாலத்திற்கு முன்பு காணப்பெற்ற தமிழர்களின் தத்துவச் சிந்தனைகளை உணர்ந்துகொள்ளத் தமிழகத்தின் இலக்கிய இலக்கணங்கள் துணைபுரிகின்றன. காலநிலைச் சூழல்களின் வெளியீடுகளாக இலக்கியங்கள் தோன்றும். இலக்கியங்களை முறைப்படுத்தும் விதிமுறைகளாக இலக்கணங்கள் தோன்றும். அவ்விலக்கண வரைமுறைகளுக்கு உட்படுதல், தள்ளுதல்களுடன் மீண்டும் இலக்கியங்கள் உருவாக்கப்பெறும் என்பது தமிழ் மரபு ஆகும். தமிழ்நூல்கள் எல்லாவற்றையும் விடப் பழமையான தொல்காப்பியத்திற்கு முன்பு ஓர் இலக்கிய மரபு இருந்துள்ளது என்பது பெறலாகிறது.

தொல்காப்பிய இலக்கண முறைமையின்படி இருந்த இலக்கியங்களும், எழுந்த இலக்கியங்களும் காணக் கிடைத்தற்கு அரிதாயின. ஆயினும் தமிழர் தம் வாழ்வியல், மெய்யியல் குறித்த சிந்தனைகள் தொல்காப்பியத்தில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆகவே தொல்காப்பியத்தில் காணலாகும் மெய்யியல் (தத்துவ) சிந்தனைகளைத் தனித்த முறையில் விளக்குவது தேவையாகிறது.

**இலக்கணமும் மெய்யியலும்**

எத்தன்மைக்கும் இயல்பு(பொது) நிலை விளக்கம், சிறப்புநிலை விளக்கம் என்ற

இருதன்மைகள் உள்ளன. இது இலக்கிய இலக்கணங்களுக்கும் உண்டு. இயல்புநிலை விளக்கம் என்பது நேரடியாக, இயல்பாகப் பொருள் விளக்குவது; சிறப்புநிலை விளக்கம் என்பது உய்த்துணர்ந்து விளங்குவது. தத்துவச் சிந்தனைகள் உய்த்துணர்தல் அடிப்படையில் எழுகின்றன. தொல்காப்பியத்தில் சிறப்புநிலைகளை உய்த்துணர்த்திடத் தத்துவவிளக்கங்கள் கிடைக்கின்றன. இவ்வாறு முயற்சித்த விளக்கங்கள் பல அறிஞர்களால் பதிவு செய்யப்பட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளன.

**"எழுத்தெனப் படுப**
**அகர முதல் னகர இறுவாய்**
**முப்பஃது என்ப**
**சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே"**

**(தொல்.,நூன்மரபு, நூ.எ-1)**

என்ற நூற்பாவில் முதல், இறுவாய், சார்ந்துவரல் என்ற மூன்று சொல்லாட்சிகள் உள்ளன. இவை முறையே பிறப்பு (முதல்), இறப்பு (இறுவாய்), சார்ந்த வண்ணமான வாழ்க்கை (சார்ந்துவரல்) என்பது விளக்கமுறுகிறது.

**"அகர முதல எழுத்து எல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு" (குறள்-1)**

என்ற திருக்குறளும் எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன. அதுபோல இறையை உலகம் முதலாக உடையது என்பதைக் காட்டுகின்றது. மேலும் "னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதல்" **(நூ.எ-1-இளம்பூரணர் உரை)** என்பது சிந்திக்கத்தக்கது. இங்கு 'னகரம்' இறுதி என்ற அடிப்படையிலேயே வழங்கியுள்ளது. ஆதலின் தோற்றம், சார்ந்ததன் வண்ணமாக வாழ்தல், இறுதி என்ற தத்துவச்சிந்தனைகளின் அடிப்படைக் கருதுகோள்கள் விளக்கமுறுகின்றன.

**சுத்த மெய்ஞான நெறி**

மனிதன் தன்னைக் காட்டிலும் நுண்மையானதை அறிந்து கொள்ளும் தன்மையுடையவன்.

**"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே" (தொல், நூன்மரபு, நூ.எ-7)**

எனும் நூற்பாவில் கண்ணிமைத்தல் என்பது ஆற்றலில் ஒளி(உருவ) வடிவம், நொடித்தல் என்பது ஒலி(ஓசை) வடிவம் ஆகும். தத்துவ வளர்ச்சியில் ஒலி 'சிவதத்துவம்' என்றும் ஒளியை 'விந்து தத்துவம்' என்றும் விளக்கியது உணரத்தக்கது. இந்த உலகம் ஒலியாலும், ஒளியாலும் உள்ளது என்பது பெறப்படுகின்றது.

மேலும் "நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே' என்ற அடி தத்துவ சிந்தனையின் ஆழத்தை உணர்த்துகின்றது. உணர்தல் என்ற சொல்லின் வேர் 'உள்' ஆகும். அது உள்ளத்தால் உணரப்படுவது. உணர்வது என்பதற்குப் "பிறர் உணர்த்தல் இன்றித் தாமே உணர வல்ல அறிவு" **(குறள்-718,உரை)** என்பது பரிமேலழகர் விளக்கமாகும். உணர்வு என்பதே எத்துணையும் இன்றி உண்மையை அறிவது ஆகும். ஆதலின் தத்துவம் என்ற சொல்லின் பொருள், கூறாக உணர்தல் என அமைகிறது. ஏன், எதற்கு, எப்படி, எங்கு, யாரால் உணர்வது என்ற வினாவின் விரிவாக்கமே தத்துவ சிந்தனைகளின்

விரிவாக்கமாக அமைகிறது. இதன் வழி மெய்மையை உணர்வது என்பது பெறப்படுகிறது.

தத்துவச் சிந்தனைகள் என்பது உண்மையை உணர்ந்தாரால் உரைக்கப்படுவது. ஆனால் தொல்காப்பியர் இன்னும் ஒரு படி மேல் சென்று 'நுண்ணிதின் உணர்ந்தோர்' என்று கூறியுள்ளார். இது நுண்மையை உணர்ந்தவர்கள், அதாவது உண்மையின் நுண்மையை உணர்ந்தவர்கள் என்பதை விளக்குகிறது. மேலும்,

**'ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'**
**(தொல், உரி.,நூ.எ-33)**

என்ற நூற்பாவில் 'உள்ளதன் நுணுக்கம்' என்பது கூர்மையான விளக்கங்களைத் தருகிறது. 'உள்ளது' என்பதற்கு இளம்பூரணர் "உள்ளது என்றது முன் அணுகாது உள்ளது" **(நூ.எ-33 - இளம்பூரணர் உரை)** என்று உரை வகுக்கின்றார்.

மேற்காணும் சான்றுகளிலிருந்து 'முன் அணுகாது உள்ளதை ஆய்தலே' உள்ளதன் நுணுக்கம் எனப்படும் கண்டறிதல் ஆகும். அவ்வாறான உண்மையைக் கண்டறிந்தவர்களே 'நுண்ணிதின் உணர்ந்தோர்' என்பதும் அவர் கண்ட வழியே உண்மையை உரைக்கும் தத்துவ வழியென்பதும் பெறப்படுகிறது. இதுவே பிற்காலத்தில் 'சுத்த மெய்ஞான நெறி' என்று விளக்கம் பெற்றது. ஆதலின் நுண்மையான உணர்வில் உணர்ந்த தத்துவ ஞானிகள் இருந்தனர் என்பதும் அவர் கண்ட வழிமுறைகள் இருந்ததென்பதும் இதனால் உணரப்பெறுகிறது.

**உயிரும் உடம்பும் உண்டெனும் தத்துவம்**

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே உயிர், உடல், இறை என்ற சிந்தனைத் தன்மைகள் இருந்து வந்தன. அவற்றிற்குண்டான அடையாளங்கள் புதைபொருட்களாகக் கிடைத்தன என்பதையும் அறியலாம். ஆயினும் எழுத்து வடிவிலான சான்றுகள் தொல்காப்பியம் காலம் முதலாகவே முழுமையாகக் கிடைக்கின்றன. அதில் உடலோடு உயிர் சேர்ந்தாலும் உயிரின் இயல்பு திரிவதில்லை என்ற விளக்கம் "மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா" **(தொல்,நூன்மரபு,நூ.எ-10)** எனும் நூற்பாவால் பெறப்படுகிறது.

தொல்காப்பியத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் பூதவாதம் என்ற உலகாயதம் இருந்தது. தொல்காப்பியத்திலும் அது தொடர்ந்தது. மண், காற்று, தீ, நீர் ஆகியவற்றை அவைகளின் சேர்க்கையிலிருந்து தோன்றுவதாகக் கூறுவது பூதவாதம் ஆகும். **(முப்பால் மணி.கி,1:1999)** என்பது அறிஞர் கருத்து. 'இயையினும்' என்ற சொல் பொருந்துவது என்ற பொருளினைத் தரும். பொருந்துவது என்பது இருவேறுபட்ட தன்மைகள் தம்முள் முரண் நீக்கிக் காரணம் பற்றிப் பொருந்துவதாகும். அவ்வகையில் உயிர் என்பது உடம்பினின்றும் வேறுபட்டது. அது உடம்பினில் வந்து இயைவது ஆகும் என்ற கருத்து பெறப்படுகிறது. இதன் வழி பூதங்களின் சேர்க்கையால் உண்டாகும் புதுப்பொருள் உயிர் என்பது தள்ளப்பட்டது.

தொல்காப்பியர் கூறும் எழுத்துக்களின் வடிவம் பற்றி இலக்கணத்தில் மெய்யியல் கருத்து காணப்படுகிறது.

**"புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருவுருவாகி அகரமோடு உயிர்த்தலும்**
**ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்**
**ஆயீர் இயல உயிர்த்தல் ஆறே"**
**(தொல்., நூன்மரபு, நூ.எ-17)**

எனும் நூற்பாவில் அக்கருத்து பொதிந்துள்ளது. அகரத்தோடு இணையும்போது தன் மெய்யின் குறியான புள்ளியை இழந்து தத்தம் முன்னை வடிவத்தைப் பெறும். பிற வகையான உயிர்கள் புணரும்போது உருவு திரிந்து அமையும் என்பது விளக்கம். இவற்றிலிருந்து அகரம் எனப்பெறும் முதலோடு இணையும்போது உயிர் தனது முன்பிருந்த சுத்த நிலையைப்பெறும் என்பதும், உயிர் வேறுவேறு பிறப்பு எடுக்கும் போது உருவு திரிந்து பிறக்கும் என்ற சிந்தனையும் பெறப்படுகிறது.

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"**
**(திருவாசகம், சிவபுராணம், 26-31)**

என்ற வரிகள் ஒவ்வொரு பிறப்பிலும் வேறுவேறு உருவினை உயிர் பெறும் என்பது ஒப்பு நோக்கத்தக்கது.

**உயிரின் வெளிப்பாட்டு நிலை**

மெய் எனும் உடலை இடமாகக் கொண்டு உயிர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் என்ற சிந்தனை தொல்காப்பியர் காலச்சூழலில் இருந்தமையால் 'மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே' **(தொல்.,நூன்மரபு, நூ.எ-18)** என்ற நூற்பாவினைத் தத்துவப் பொருண்மையில் படைத்துள்ளார்.

**பிறப்பின் ஆக்கம்**

'பிறப்பு' என்ற சொல் தொல்காப்பியரால் 'தோன்றுவது' என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. நுண்மையாய் இருந்தது பருமையாக மாறி ஒலியாகப் பிறக்கிறது என்பது அவர் கொள்கை.

**"பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல**
**திறப்படத் தெரியும் காட்சி யான"**
**(தொல்.,பிறப்பியல் - நூ.எ-1)**

எனும் வரிகள் பிறப்புக் கொள்கையை விளக்குவன. மேற்காணும் நூற்பாவில் "உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி" எனும் வரிக்கு இளம்பூரணர், 'ஓர் உறுப்போடு தம்மில் பொருந்தி அமைதி பெற' என்று உரை வகுக்கின்றார் **(நூ.எ-1,உரை)**. அதாவது உலகு, உடல் என்பது உறுப்புக்கள். இவை ஐம்பூதச் சேர்க்கையால் உருவாவது. இது உலகாயதர் கருத்துமாகும். இதனை,

**"நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின் "**

**(தொல்.,மரபியல், நூ.எ-87)**

எனும் நூற்பா விளக்குகிறது. உலகு, உடல் என்பது ஐம்பூதச் சேர்க்கை எனினும் பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல்பு பற்றி வரும். இங்கு வேறுவேறு இயல்பு என்பது வினைக் கொள்கைகளின் கருத்தமைவு எனலாம். மேலும் பிறப்பது அழியும், பிறப்பு அழியாது என்ற கருத்தமைதியும் பெறலாகிறது.

**தெய்வம்**

தொல்காப்பியர் 'தெய்வம்' என்ற சொல்லை, தம் நூலில் பயன்படுத்துகின்றார். அவர் காலத்தே தெய்வத்தைச் சுட்டிய பெயர்கள் இருந்தன என்பதை "தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவியும்" **(தொல்.,கிளவியாக்கம்,நூ.எ-4**) எனும் நூற்பாவில் கூறியுள்ளார்.

**வினைக்கொள்கை**

தத்துவச் சிந்தனைகளில் வினைக்கொள்கை என்பது குறிப்பிடத்தக்கது. இன்ப துன்பங்களுக்கு வினைக்கொள்கையே காரணமானது. ஒருவரது வினைக்காலம் வரும்போது மாறாமல் அவரைச் சாரும் என்பது சைவ சித்தாந்த உண்மையாகும். இக்கருத்தினை உள்ளடக்கிய நூற்பாவாக,

**"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலை காலமொடு தோன்றும்'**

**(தொல்.,வினையியல், நூ.எ-1)**

என்று அமைகின்றது. இந்நூற்பா "வினைச்சொல் என்பது வேற்றுமை உருபினை ஏற்காது. ஆராயுங்காலத்துக் காலத்தொடு தோன்றும்" என்பதைக் கூறவந்ததாகும். எனினும் இதுவே 'உயிர்களால் அளவின்றி ஈட்டப்பட்ட வினை தாமும், ஓருயிர் செய்த வினை பிரிதோர் உயிரைச் சார்தல் ஆகிய வேற்றுமையின்றி அவ்வவ்வுயிர் செய்தவினை அவ்வவ்வுயிர்க்கேயாய், ஆராயுங்காலத்து அவ்வினை வந்து உருக்கும் சமயத்தில் அவ்வுயிர்கள் மாட்டுத் தோன்றும்' **(தொல்.,வினையியல்,நூ.எ-1)** என்ற கருத்து வழி, வினைக்கொள்கையைத் தொல்காப்பியர் ஏற்றுக்கொண்டார் என்பதும், அத்தெளிபொருளின் விளக்கமாகவே இந்நூற்பா அமைந்தது என்பதும் பெறலாகிறது. இதன் தொடர்ச்சியாகக் காலம் என்பதன் விளக்கத்தைத் தொல்காப்பியர் கூறுகின்றார். அதில் மூன்று காலமும் குறிப்போடு தோன்றும் என்கிறார்.

**"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்**
**மெய்நிலை உடைய தோன்ற லாறே"**
**(தொல்.,வினையியல் நூ.எ-2)**

என்னும் நூற்பா வழி பிற்கால மெய்யியல் சொல்லாட்சிகளான பழவினை (சஞ்சிதம்), நிகழ்வினை (பிராரப்தம்), எதிர்வினை (ஆகாமியம்) ஆகியவற்றின் பொருண்மை பெறப்படுகிறது. மேற்காணும் நூற்பாவினை 'மெய்நிலை உடைய தோன்றலாறே' எனும் அடியமைவு மெய்யியல் தன்மைக்கு வலுசேர்ப்பதாகக் கொள்ளலாம்.

**கமம்**

கமம் என்ற சொல்லுக்குத் தொல்காப்பியர் **'கமம் நிறைந்தியலும்" (தொல்.,உரியியல், நூ.எ-59)** என்று பொருள் வகுக்கின்றார். 'நிறைந்திருப்பது, இயல்பாய் இருப்பது' என்ற இருபொருண்மைகளை உள்ளடக்கியதாக இச்சொல் அமைகிறது. மெய்மை உணர்வில் நிறைந்திருப்பது, மெய்மை உணர்வில் இயல்பாக இருத்தல் என்று விளங்குகைப் பொருளைத் தருகிறது. மேலும் 'கமம்' என்ற சொல்லினைப் பின்னொட்டாகக் கொண்டு அமைந்த சொல் ஆகமம் ஆகும். 'ஆ' என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு பசு அல்லது கட்டுண்டது என்பது பொருளாகும். உயிர்க்குலங்கள் ஆணவத்தால் கட்டுண்டது என்பது தத்துவப் பொருளாகும். ஆதலின் ஆகமம் என்பதற்கு, கட்டுண்ட உயிர்க்குலங்களை நிறைவிக்க, இயல்பு நிலைக்குக் கொண்டு செல்வது என்பது, கமம் என்பதன் பொருளாக அமைகிறது. இச்சொல் தமிழ்ச்சொல்லாக நிறுவின் தத்துவ உலகில் தமிழுக்கென ஒரு தனித்த நிலையும் கிடைக்கும். மெய்யியலுக்கான சொல்லாட்சிகள் பலவற்றைத் தொல்காப்பியர் பயன்படுத்துகின்றார்.

**"காலம் உலகம் உயிரே உடம்பே**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்**
**ஞாயிறு திங்கள் சொல் எனவரூஉம்'**
**(தொல்.,கிளவியாக்கம், நூ.எ-57)**

எனும் நூற்பாவில் இடம்பெறும் சொற்கள் மெய்யியல் துறையின் நுட்பச் சொற்களாகப் பயன்படுத்தப்படுவன ஆகும்.

**ஊழ்**

தொல்காப்பியர் காலத்தில் 'ஊழ்' என்ற சொல் மெய்யியல் தன்மை உடைய சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊழ் என்ற சொல்லுக்கு முறைமை என்பது பொருள். "இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், விதி என்பன ஒருபொருட் கிளவி" **(ஊழ், அதிகாரவிளக்கம்)** என்பது பரிமேலழகர் விளக்கம்.

**'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"**
**(தொல்.,களவியல் -நூ.எ-2)**

என்ற நூற்பா வழி 'ஊழ்' என்பதே இவ்வுலக வாழ்க்கைக்கு உரிய இருமையை (தலைவன், தலைவி) இணைத்தற்கு உரியது என்பது பெறலாகிறது. மேலும் மெய்யியல் தன்மையில் தன்னை உணர்தல் என்பதும், தன்னுணர்வு நிலையிலிருந்து உயர்ந்து இறைநிலை உணர்வதும் முக்கியமானதாக அறியப்பட்டுள்ளது. அவ்வகையில் உணர்ந்த இறைநிலை என்றும் நிலைபேறு உடையதாக அமையும். நன்மை, தீமை, அச்சம் ஆகியவற்றின் பால் சார்ந்ததன் வண்ணமாக நிற்பதே 'தான்' என்று சுட்டப்படும் உயிரின் தன்மை. அது பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்ற மூன்று காலமொடு விளங்கும் எனும் சிந்தனையை உள்ளடக்கிய நூற்பாவாக,

**"தன்னும் அவனும் அவளும் சுட்டி**

**மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**
**நன்மை தீமை அச்சம் சார்தலென்று**
**அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ**
**முன்னிய காலம் மூன்றொடு விளக்கி"**

**(தொல்.,அகம்.,நூ.எ-39)**

என்பது அமைகிறது. மேற்காணும் நூற்பாவின் பொருண்மையை அறியப் பிற்காலச் சைவ சித்தாந்தத்தை ஒப்பிட்டு நோக்குவது இங்கு அவசியமாகிறது. நமசிவய; சிவயநம என்பன மெய்யியல் தன்மை குறியீட்டு மொழிகள் எனவும் ஐந்தெழுத்து எனவும் சிறப்பிக்கப்பட்டன. சி - சிவம், வ - சக்தி, ய - உயிர், ந - மாயை, ம - ஆணவம் என்று விளக்கப்பட்டன. இந்நூற்பா இவற்றைப் பொருத்திக்காட்ட இடமளிக்கிறது. தன்னும் - உயிர்(ய), அவன் - சிவம்(சி), அவள் -சக்தி(வ), நன்மை, தீமை, அச்சம், சார்தல் - ஆணவம், மாயை. இவற்றைப் பொருத்தி மெய்யியல் சிந்தனைகளை ஆய்வதற்கும் இந்நூற்பா இடமளிக்கின்றது.

**நிலையாமை**

நிலையாமை என்பதை இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என மூவகைப்படுத்துவர். இத்தகைய நிலையாமைச் சிந்தனை தமிழ் மெய்யியலின் முதன்மைக் கூறுகளில் ஒன்று. இந்நிலையாமைத் தன்மையை, **"நில்லா உலகம் புல்லிய நெறித்தே" (தொல்.,புறம்.,நூ.எ-16)** எனத் தொல்காப்பியம் விளக்குகிறது.

**அகத்திணை மரபின் வழி மெய்யியல்**

தொல்காப்பியர் கால மெய்யியல் சிந்தனையின் தன்மைகளாகக் கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய சொற்கள் விளங்குகின்றன. இம்மூன்றும் கடவுளோடு இணைந்தவை என்பதை,

**"அமரர் கண் முடியும் அருவகை யானும்**
**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**
**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப'**
**(தொல்., புறம், நூ.எ-21)**

என்ற நூற்பா குறிக்கின்றது. அமரர் கண் முடியும் அறுவகை என்பது, 'கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்பன **(தொல்.,புறம்.,நூ.எ-21,இளம்பூரணர் உரை)**. இதில் 'புரை தீர் காமம் புல்லிய வகை' என்பது மெய்யியல் தன்மை வாய்ந்த தொடர் ஆகும். 'காமம்' என்ற சொல் 'கமம்' என்பதன் முதல் நீண்டது. கமம் என்பதற்கு 'நிறைந்து இயலுவது' ஆதலின் இவ்வுலக வாழ்வியலில் உடலோடு இணைத்துக் காட்டப்படும் சிற்றின்பம் புரை உடைய காமம். ஆயினும் அது பேரின்ப நிலையினை உணர்த்தற்கு உரிய சிறு கூறு. ஆதலின் உலகு, உடல், குற்றம் தீர்ந்த, நிறைந்தியலும் உயர் மெய்மையையே 'புரைதீர் காமம்' என்பது குறிக்கின்றது. மேற்காண் விளக்கத்திலிருந்து அகத்திணை மரபுகள் மெய்யியல் அடிப்படையில் புரிதலுடன் அணுகும் போது, அது குறைவிலா இன்ப நிலைக்குக் குற்றம் தீர்ந்த இன்பத்திற்கு, அதாவது முத்தி, வீடு பேறு போன்ற நிலைகளை உணர்த்துவது பெறலாகிறது. பிற்காலத்து நம்பியகப் பொருள் இலக்கண நூலுக்கு

இலக்கியமாகக் குமரகுருபரரின் சிதம்பர செய்யுட் கோவை அமைகிறது.

"இம்மையில் துய்க்கும் இன்பமெலாம் மறுமை இன்பத்தின் முதற்சுவையாம் என்றும், இம்மை இன்பத்தின் தன்மையை உண்மையான் ஆராய்ந்து அதனைத் துய்க்கும் முறை பிழைபடாமல் துய்த்து வருவோருக்கு அதுவே மறுமை இன்பமாய் மாறி அவரைப் பேரின்ப நுகர்ச்சியில் செலுத்தும்' **(மறைமலை அடிகள்,198:1999)** என்ற அறிஞர் கருத்தும்,

**"பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே**
**முற்ற வரும் பரிசு உந்தீபற**
**முறையாது மாயை என்றுந்தீபற"**
**(திருவுந்தியார்,பா.எ-33)**

என்ற பாடலின் கருத்தும் ஒப்புநோக்கற்குறியது. மேலும் மாணிக்கவாசகர் அகப்பொருள்
இலக்கணத் தன்மையில் திருக்கோவையாரைப் படைத்து உள்ளார். இறைவன் என்பது உயிர் உறவுத் தன்மையில் விளக்கப்பெற்றுள்ளது. இவற்றில் இருந்து அகத்திணை மரபுகள் பொது நிலையில் உலகியலுக்கு உண்டான தன்மையை தாண்டிய அல்லது கழிந்த உணர்த்தினாலும் சிறப்பு நிலையில் மெய்யியல் தன்மையை உலகம் விளக்கியுள்ளன என்பது இவ்வாய்வுவழிப் பெறும் கருத்தியலாகும்.

இதில் அமரர், கடவுள் என்ற சொல்லாட்சிகளே பயின்று வருவதன்றி 'சுட்டி ஒரு தெய்வம்' எனப் பெயர் குறிப்பிடவில்லை. ஆனால் குறியீட்டுப் பொருண்மையில்,

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"**
**(தொல்.,புறம், நூ.எ-25)**

என்று வருகின்றது.

**கொடிநிலை, கந்தழி, வள்ளி**

தற்காலத்தில் திருக்கோயிலில் பெரும் திருவிழாவிற்கு முன்பு கொடியேற்றம் என்ற நிகழ்வு நடைபெறுகிறது. இது ஆணவம் நீங்கிய உயிரினை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லுவதின் குறியீடு ஆகும். உலகின் எல்லா நாட்டிலும் கொடி என்பது மிக மதித்தலுக்கு உரிய ஒன்றாக அமைந்துள்ளது. கொடியின் நிறங்களும், வடிவங்களும் பல்வேறு உயர்வுப் பொருளை உணர்த்தி நிற்கின்றன. இந்திய நாட்டின் உயர்வு, தியாகம், அமைதி, வளமை, மையமான அறம் என்பதால் அமைகிறது என்பதை மூவண்ணக் கொடி உணர்த்துகிறது.

**"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடின் நன்று**
**ஒளிக்கும் எனினும் இருள் அடராது உள் உயிருக்கு உயிராய்த்**
**தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளதேனும் திரிமலத்தே**
**குளிக்கும் உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே"**
**(கொடிக்கவி, பா.எ-1)**

என்ற பாடல் இறைவன் திருவருள் ஆணையின் வழி உயிர்களை எல்லாம் இடர் கடலினின்றும்

வாங்கிப் பேரின்ப வழியிலே செலுத்துவான் என்பதற்கு உரிய குறியீடாகும்."(மேலவர், மேலது) என்பதை உணர்த்துகின்றது.

கந்தழி என்பது கந்து + அழி என நிற்கும். கந்து என்பது பற்றுக்கோட்டினைக் குறிப்பது. உலகியலில் பற்ற வேண்டும், பற்றியதை விட வேண்டும். இது மாறிமாறி நிகழும்போது உயிர்நிலை அமைகிறது.

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு"** **(குறள்-350)**

எனும் குறள் பற்ற வேண்டும், பற்றியதை விட வேண்டும் என்று விளக்குகின்றது. இது கந்தழியின் விளங்குதல் ஆகும்.

வள்ளி என்பது வளைந்த தன்மையினைக் கொண்டு மறைந்து கிடத்தல் ஆகும். இவ்வாறு அமைந்த கிழங்கையே வள்ளிக் கிழங்கு என்றும், அவ்வாறு கிடைத்த பெண்ணுக்கு வள்ளி என்றும் பெயரிட்டனர். இதன் மெய்ப்பொருளாக உயிர் தன் தன்மைகளில் மாறுபாடு உடையதாக (வளைவு) ஆணவம் மறைத்த நிலையில் காணப்படுவதை விளக்குவது எனலாம். இம்மூன்றும் உயிரின் குற்றம் தீர்க்கும் தன்மை ஆதலின் 'வடுநீங்கு சிறப்பின்' என்றார் தொல்காப்பியர்.

மேற்காணும் விளக்கங்களிலிருந்து உயிரானது தன்னை உணரா ஆணவச் சேர்வுடன் கூடிய (வளைந்த) நிலையே வள்ளி எனவும் தன்னை உணர்ந்து பற்றி, பற்றியதை அழித்து மேலேறும் (உயர்வுறும்) நிலையே கந்தழி எனவும், மெய்மையில் உயர்ந்து நிற்கும் நிலையே கொடிநிலை எனவும் விளக்கப்பட்டன. இது தமிழரின் ஆழமான மெய்யியல் சிந்தனை என்பதும் வருவித்து விளக்கப்பட்டது.

முடிபுகள்

தொல்காப்பியம் தமிழின் தலையாய இலக்கண நூல். வாழ்வியலுக்கு உண்டான தன்மைகளையும் உள்ளடக்கியது. இயல்பாக அமைந்த நூற்பாக்களிலும், அவற்றின் சொல்லாட்சிகளிலும் பல்வகையான மெய்யியல் தன்மைகள் புதைந்துள்ளன.

- தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமல்ல. மெய்யியல் சிந்தனைகளுக்கும் இடம் கொடுத்த தமிழ் நூல்.
- 'நுண்ணிதின் உணர்ந்தோர்' என்ற சொல்லாடல்வழி மெய்யியல் சிந்தனையில் ஆழ்ந்தோரை, தொல்காப்பியம் சுட்டுகிறது.
- உயிரும் உடம்பும் உண்டென்பது தொல்காப்பியவழிப் பெறப்படும் மெய்யியல் சிந்தனையாகும்.
- உயிரின் வெளிப்பாட்டு நிலை உடலை இடமாகக் கொண்டது என்பதும் தொல்காப்பியம் கூறும் நெறியாகும்.
- ஆகமம் என்பதற்கு ஆன்மாவை நிறைத்து, இயங்கச் செய்வது என்பதும் பெறப்படுகிறது.

**மேற்கோள் நூல்கள்**

உமாபதி சிவம்., - கொடிக்கவி, அருள்நந்தி சிவம் அருட்பணி மன்ற வெளியீடு, திருநெல்வேலி, பதிப்பு - 1999.

தியாகராசன்.எஸ்.,(பதி.) - சித்தாந்த சாத்திரம் பதினான்கு – மூலமும் உரையும், சைவ சித்தாந்தப் பெருமன்றம், பதிப்பு – 1994.

தொல்காப்பியர்., - தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் – இளம்பூரணம், கழகப்பதிப்பு, சென்னை, பதிப்பு – 1953.

தொல்காப்பியர்., - தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – இளம்பூரணம், கழகப்பதிப்பு, சென்னை, பதிப்பு – 1953.

தொல்காப்பியர்., - தொல்காப்பியம் – பொருளதிகாரம் – இளம்பூரணம், கழகப்பதிப்பு, சென்னை, பதிப்பு – 1953.

மறைமலை அடிகள்., - தமிழர் மதம், மணிவாசகர் பதிப்பகம், பதிப்பு – 1999.

ர்., - திருவாசகம், பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு – 36, காசிமடம், திருப்பனந்தாள், பதிப்பு – 1985.

முப்பால் மணி.கி., - இந்தியத் தத்துவ தரிசனங்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு – 1999.